# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 10 திங்கட்கிழமை 24.06.2024 கதிர் 281







# கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயங்களுக்கு உடனடித் தீர்வு போராட்டத்தால் கல்முனையில் பதற்றம் - போக்குவரத்தும் பாதிப்பு

## பிரதேச செயலகத்தின் நுழைவாயிலையும் பூட்டிய பொதுமக்கள்





கல்முனைவடக்குபிரதேசசெயலகவிடயங்களுக்கு உடனடித் தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரி இன்று தமிழ் மக்களால் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமையால் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டதுடன் பதற்ற நிலையும் தொடர்ந்தது.

அத்துடன்பிரதேசசெயலகத்தின்நுழைவாயிலையும் பூட்டிய நிலையில்அதிகாரிகளை உள்நுழைய விடாமல் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெறும் நிர்வாக அடக்குமுறைகளை கண்டித்தும் அதற்கான உரிய தீர்வு கோரியும் தொடர்ச்சியாக 92 நாட்களாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இன்று பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. 2 ➤

# வடக்கில் குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலையில் அனைத்து மதத்தவரும் சுதந்திரமாக வழிபட ஏற்பாடு

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உறுதி



யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நேற்று நல்லை ஆதீனத்துக்கு விஜயம் செய்ததோடு அங்கு சமயத் தலைவர்களுடன் கலந்துரையாடினார்.

நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் சிவபூமி அறக்கட்டளை அமைப்பாளர் கலாநிதி ஆறு. திருமுருகன், ரிஷிதொண்டுநாத சுவாமிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது குருந்தூர்மலை மற்றும் வெடுக்கு நாறிமலையில் சைவ மக்கள் சுதந்திரமாக வழிபடுவதற்கு வகை செய்தல், காங்கேசன்துறையில் உள்ள ஆச்சிரமத்தின் காணிவிடுவிப்பு, திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்திலுள்ள பெட்டிக்கடைகளை அகற்றுதல் உள்ளிட்ட கோரிக்கைகள் இந்து சமயத் தலைவர்களால் முன்வைக்கப்பட்டன.

இதற்குப்பதிலளித்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை என்பன தொல்பொருள் திணைக்களக் கட்டுப்பாட்டின் கீழ் 2 ➤

# தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம்



தோட்டத்தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாவை வழங்குமாறு வலியுறுத்தி பசறை எல்டப் கிகிரிவத்தை தோட்டத் தொழிலாளர்கள் இன்று அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்று காலை 9. 30 மணியளவில் எல்டப் கிகிரிவத்தை தோட்டக் காரியாலயத்துக்கு முன்பாக இந்த அமைதி வழிப் போராட்டம் இடம்பெற்றது.

அரசால் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கமைய தங்களுக்கு உடனடியாக 1,700 ரூபா சம்பளத்தை வழங்குமாறு போராட்டத்தில் ஈடுபட்ட தோட்டத் தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்தனர். 2 ➤

# மொட்டும் யானையும் இணைந்து பயணித்தால் வெற்றி நிச்சயமாம்

## எஸ்.பி. கூறுகின்றார்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து பயணிக்காவிட்டால் ஜனாதிபதித் தேர்தலில் இரு கட்சிகளுக்கும் பின்னடைவு ஏற்படக்கூடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது-

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆசியுடன் களமிறங்கினால் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார். அவ்வாறு இல்லாவிட்டால் தோல்வியே ஏற்படும்.

ரணிலைப் பிரதமர் மற்றும் ஜனாதிபதிப் பதவிக்கு மொட்டுக் கட்சியே கொண்டுவந்தது. எனினும், மொட்டுக் கட்சி எதிர்பார்த்த அரசொன்று 2 ➤

# தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்கல் ஜனநாயக தேசியக் கூட்டணியின் தீர்மானம்



தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்குவது தொடர்பான ஜனநாயக தேசியக் கூட்டணியின் தீர்மானமிக்க கலந்துரையாடல் இன்று வவுனியா, கோவிற்புளியங்குளத்தில் உள்ள தனியார் விடுதியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ரெலோ இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின்போது, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்குவது தொடர்பாக ஜனநாயக தேசியக் கூட்டணியின் இறுதித் தீர்மானம் 2 ➤

# யாழ்ப்பாணப் பல்கலையில் போராட்டம் தொடர்கிறது




யாழ்.பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தினரின் 53 ஆவது நாள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் சத்தியாகிரகப் போராட்டமாகத் தொடர்கிறது.

யாழ்பல்கலைக்கழக விஞ்ஞானபீடப்பிரதான வாயிலில் இச்சத்தியாகிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் முன்னெடுக்கும் சத்தியாகிரகப் போராட்டம் இன்று நான்காவது நாளாகவும் பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் தொடர்கிறது.

சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து கல்விசாரா ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தினை 53 ஆவது நாளாகவும் முன்னெடுத்துவருகின்றனர். (01)

# சா.தரப் பரீட்சைப் பெறுபேறு பற்றி வெளியாகியுள்ள அறிவிப்பு

2023 (2024) ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் 10 நாட்களுக்குள் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வாரத்திற்குள் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அவ்வாறு இல்லையெனில் 10 நாட்களுக்குள் பெறுபேறுகள் வெளியிடப்படும் எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சாதாரண தரப் பரீட்சைகள் கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. அதில் 4,52,979 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 3,87,648 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் மற்றும் 65,331 பேர் தனியார் விண்ணப்பதாரர்கள் அடங்குவர். (05)

# ஜனாதிபதியின் விசேட உரை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 26 ஆம் திகதி இரவு 8 மணிக்கு நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றினை ஆற்றவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி இதன்போது மக்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# பணவீக்கத்தில் மாற்றம்

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் தரவுகளின் அடிப்படையில், இலங்கையின் பணவீக்கம் ஏப்ரல் 2024 இல் 2.7 வீதமாகக் காணப்பட்டதுடன், அது மே 2024 இல் 1.6 வீதமாகக் குறைந்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

உணவு வகையின் பணவீக்கம் ஏப்ரல் 2024 இல் 3.3 வீதமாக இருந்த நிலையில் அது மே 2024 இல் 0.5 வீதமாகக் குறைந்துள்ளது.

இதேவேளை, 2024 ஏப்ரலில் 2.3 வீதமாகப் பதிவாகியிருந்த உணவு அல்லாத வகையின் பணவீக்கம் 2024 மே மாதத்தில் 2.4 வீதமாக சிறிதளவு அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் மேலும் தெரிவிக்கிறது.




## தோட்டத் தொழிலாளர்கள் .......

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் அசோக் குமார் தலைமையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மாநில இயக்குநர் கனகராஜ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் காரியாலய உத்தியோகத்தர்கள் ஆகியோரும் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்ததோடு தோட்ட உயர் அதிகாரியுடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டனர். (05)

## தமிழ்ப் பொதுவேட்பாளரை.....

எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொது வேட்பாளர் தொடர்பாக முன்னதாக சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளுடன் தனித்தனியாகக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

இதனையடுத்து கட்சிகளின் உயர்மட்டக் குழுவினருடன் ஆராய்ந்து பதிலளிப்பதாக குறித்த கட்சிகள் அறிவித்திருந்தன. இந்த நிலையிலேயே இன்று இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## மொட்டும் யானையும்....

அமையவில்லை. எனவே, இரு தரப்புக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் பேச்சு மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு இணைந்து பயணித்தால் ரணிலுக்கு வெற்றி நிச்சயம். மொட்டுக் கட்சி தனிவழியில் சென்றால் இரு தரப்புகளுக்கும் பின்னடைவு ஏற்படும்" - என்றார். (05)

## கல்முனை வடக்கு.....

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக மட்டக்களப்பு - கல்முனை வீதி தடைப்பட்டதால் வாகனங்களை மாற்று வீதிகளில் பொலிஸார் அனுப்பினர்.

இதேவேளை, 6 மணித்தியாலங்களாகக் கல்முனை நகர் போராட்டக்காரர் வசம் இருந்த நிலையில் கல்முனையில் வீதி மறியல் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மாவட்ட அரச அதிபர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களிடையே கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

முற்பகல் 8 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை கல்முனை மாநகரம் ஸ்தம்பித்திருந்ததுடன் நகரில் இருந்து அனைத்து பொதுப் போக்குவரத்துக்களும் தடைப்பட்டிருந்தன. மருத்துவ சேவை வாகனங்கள் மாத்திரம் ஆர்ப்பாட்டக்காரர்களால் அனுமதிக்கப்பட்டிருந்தன.

அத்துடன் தமது நியாயமான கோரிக்கைக்குப் பதில் என்ன? எனப் பல கோஷத்துடன் வீதியில் அமர்ந்தும் அவர்கள் போராட்டம் செய்தனர். பின்னர் மாவட்ட அரச அதிபர் பொலிஸாரின் மத்தியஸ்த்துடன் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கேட்டுக்கொண்டதற்கிணங்க சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் 8 பேர் மாவட்ட செயலகத்துக்குப் பேச்சுவார்த்தைக்குச் சென்றனர். அதுவரை வீதி மறியல் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. மேலும் வழமை போன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக சுழற்சி முறை போராட்டம் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.


இதேவேளை, வழமைக்கு மாறாக இன்று பாரிய விமானம் ஒன்று பெரும் இரைச்சலுடன் கல்முனை நகருக்கு மேலே வட்டமடித்த வண்ணம் இருந்ததையும் காண முடிந்தது. (05)

## வடக்கில் குருந்தூர்மலை....

இருப்பினும் அனைத்து மதத்தவரும் பாரபட்சமின்றி சுதந்திரமாக வழிபட வழி செய்வதாக உறுதியளித்தார்.

மேலும், திருகோணமலையில் உள்ள சிறு கடைகளை அகற்றல் மற்றும் காங்கேசன்துறையில் உள்ள சைவ ஆச்சிரமத்தின் காணி விடுவிப்பு தொடர்பிலும் பரிசீலிப்பதாக அவர் தெரிவித்தார். (05)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட




காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# மடத்தடி மீனாட்சி அம்மனாலய தலைவராக மீண்டும் ஏகமனதாக ஜெயசிறில் தெரிவு



வரலாற்றுப்பிரசித்திபெற்ற மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் புதிய தலைவராக பிரபல சமூகசேவையாளரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும், முன்னாள் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளருமான கலாநிதி கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் மீண்டும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

ஆலயத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (22) மீனாட்சிஅம்மன் பழைய சந்நிதானத்தில் பரிபாலன சபையின் ஆலோசகரும் புதிய நிருவாக சபைதெரிவுக்கான தற்காலிக தலைவருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

அச்சமயம் புதிய நிருவாக சபை முறைப்படி தெரிவு செய்யப்பட்டது.

கடந்த 10 வருடங்களுக்குப் பின்னர் நடைபெற்ற இப்பொதுக் கூட்டம் ஆலய குரு சிவ ஸ்ரீ சபா.கோவர்த்தன சர்மா அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது

புதிய பரிபாலன சபை வருமாறு-

தலைவராக மீண்டும் கி.ஜெயசிறில் செயலாளராக மீண்டும் த.சண்முநாதன் பொருளாளராக மீண்டும் அ.சுந்தரராஜன் தெரிவு செய்யப்பட்டனர். மூவருக்கும் முறைப்படி உரிய ஆவணங்கள் கையளிக்கப்பட்டன.

உபதலைவர்களாக பி.சண்முகராசா ஏ.காராளசிங்கம் கே.கணேசன் உப செயலாளராக எஸ்.சிறிகாந்தன் மற்றும் கணக்காளர்களாக கே.உமாரமணன் கே.குழந்தைவடிவேல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலோசகர்களாக வி.ரி.சகாதேவராஜா சி.அரிய நாயகம் ஆகியோர் சபையால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

நிருவாக சபை உறுப்பினர்களாக அம்பாறை மாவட்டத்தின் சகல தமிழ்ப் பிரதேசங்களிலிருந்தும் 21 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

1999 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட யாப்பில் சில சரத்து மாற்றங்களுக்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

# நானே ஆரம்பம் வெல்வோம் ஸ்ரீலங்கா! ஸ்மார்ட் போர்ட் கையளிப்பு நிகழ்வு




(சர்ஜுன் லாபீர்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அனுசரணையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாடசாலைக்கு ஸ்மார்ட் போர்ட் கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக் கிழமை (22) தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் அம்பாறை வீரசிங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கமு.சது. அல் அர்ஷத் மகா வித்தியாலயத்திற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமாரவினால் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவிடம் ஸ்மார்ட் போர்ட் கையளிப்பு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில்சம்மாந்துறைஅல்அர்ஷத்மகாவித்தியாலய அதிபர் எஸ்.அப்துல் ரஹீம், முன்னாள் அமைச்சர் தயா கமகே உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மாவடி பேர்ல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சாதனையாளர் கௌரவிப்பும் வர்ண இரவும்

(மாளிகைக்காடு செய்தியாளர்)

காரைதீவு பிரதேச மாவடிப்பள்ளியிலிருந்து பல்கலைக்கழக அனுமதிபெறத தகுதியானவர்கள், சாதனையாளர்கள் கௌரவிப்பும், மாவடிப்பள்ளி பிரிமியர் லீக் சுற்றுத்தொடரின் தொடக்கவிழாவும் மாவடி பேர்ல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கழக தலைவரும், சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக இஸ்லாம் பாட




வளவாளருமான மௌலவி ஏ.ஜே.எம். அஸ்ரப் தலைமையில் வெள்ளிக்கிழமை இரவு மாவடிப்பள்ளி அஸ்ரப் மகா வித்தியாலய திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

அதி திறமை சித்திகளை பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் அதிதிகளினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் மாவடிப்பள்ளி பிரிமியர் லீக் சுற்றுத்தொடரின் நான்கு அணிகளும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் ரிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன், மாவடிப்பள்ளி அஸ்ரப் மகா வித்தியாலய அதிபர் வீ.எம். ஸம்ஸம், அல்- ஜலால் வித்தியாலய பிரதி அதிபர் ஏ.எல். ரஜாப்தீன், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். /ஹுதா உமர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாவடிப்பள்ளி அமைப்பாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், விளையாட்டு கழகங்களின் நிர்வாகிகள், தொழிலதிபர்கள், பிரமுகர்கள் பலரும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.



# மே.இ.தீவுகளை வெளியேற்றிய தென்னாபிரிக்கா அரையிறுதிக்குள் இங்கிலாந்தும் நுழைந்தது!

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு தென்னாபிரிக்க அணி தகுதி பெற்றுள்ளது.

சூப்பர் 8 சுற்றில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தீர்மானமிக்க போட்டியில் வெற்றியீட்டியதன் ஊடாக அரையிறுதிப் போட்டிக்குள் இந்த அணி நுழைந்தது.

மேற்கிந்திய தீவுகளின் அன்டிகுவாவில் இன்று நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய தென்னாப்பிரிக்கா அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்பிற்கு 135 ஓட்டங்களை எடுத்தது. ரொஸ்டன் சேஸ் 52 ஓட்டங்களையும், கைல் மேயர்ஸ் 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். தென்னாபிரிக்கா அணியின் ஷம்ஸி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

136 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி தென்னாபிரிக்கா அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நிலையில் 2 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 15 ஓட்டங்களைப் பெற்று தடுமாறிய வேளையில்போது மழை குறுக்கிட்டது. இதன் காரணமாக போட்டி சில நிமிடங்களுக்கு இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், 17 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தவும் பட்டது. அதற்கமைய, டிஎல்எஸ் முறைப்படி தென்னாபிரிக்க அணிக்கு 123 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

மீண்டும் போட்டி ஆரம்பித்ததும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 16.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியில்கை அடைந்தது. ஸ்டப்ஸ் 29 ஓட்டங்களையும், ஹென்ரிச் கிளாசென் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். மேற்கிந்தியத் தீவுகளின் ரொஸ்டன் சேஸ் 3



விக்கெட்டுக்களையும், அல்சாரி ஜோசப், அன்ட்ரே ரசல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

சூப்பர் 8 சுற்றின் முதலாவது குழுவில் இடம்பெற்றுள்ள தென்னாபிரிக்கா

இந்தப் போட்டியில் வெற்றியீட்டியதுடன், பங்குபற்றிய 3 போட்டிகளிலும் வென்று, 6 புள்ளிகளுடன் அரையிறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுக்கொண்டது.

இன்றைய போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க அணியின் ஷம்ஸி தெரிவு செய்யப்பட்டார்.

சூப்பர் 8 சுற்றின் முதலாவது குழுவில் இடம்பெற்றுள்ள இங்கிலாந்து அணி 3 போட்டிகளில் 4 புள்ளிகளுடன் உள்ள நிலையில், மேற்கிந்தியத் தீவுகள் அணி சூப்பர் 8 சுற்றில் பங்குபற்றிய 3 போட்டிகளில் ஒரு போட்டியில் மாத்திரமே வெற்றியீட்டியிருந்தது. எனவே, மேற்கிந்தியத் தீவுகள் அணி ரி-20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து தோல்வியுடன் வெளியேற, இங்கிலாந்து அரையிறுதிக்குள் நுழைந்தது. (04)

## ”மொட்டுக் கட்சி வேண்டாம் என்பவர்கள் தாராளமாக கட்சியிலிருந்து செல்லலாம்!”

### பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ



தேர்தலில் தமது கட்சி சார்பான ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் முன்மொழியப்படுவாராயின், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை முன்னெடுத்து அந்த கொள்கைகளை பாதுகாக்கக்கூடிய ஒருவரை மாத்திரமே பெயரிடுவோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சி மூலம் வாக்குகளை மட்டுமே பெற வருகின்றவர்களுடனும், மொட்டு கட்சியில் போட்டியிட்டு வெற்றியீட்டி தற்போது பிரிந்து சென்றுள்ளவர்களோடும் எந்த வகையிலும் கூட்டணி வைக்கப்போவதில்லை எனவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் தரப்பிலுள்ள சிலர், மொட்டுவுடன் இணைந்து வெற்றி பெற முடியாது என கூறுவதாக பேசப்படுகின்றது, அப்படியாயின் அவர்கள் மொட்டுவை விட்டு வெளியேறி சென்று விடலாம் அதற்கு எந்தவொரு தடையும் கிடையாது எனவும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ரென-71)

## தென் கொரிய பற்றரி தொழிற்சாலையில் தீ விபத்து - 16 பேர் உயிரிழந்ததாக தகவல்



தென் கொரியாவில் உள்ள லித்தியம் பற்றரி தயாரிக்கும் தொழிற்சாலையொன்றில் இன்று ஏற்பட்ட தீ விபத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்த நாட்டின் தலைநகரான சியோலுக்கு தெற்கே உள்ள ஹ்வாசோங் என்ற நகரில் உள்ள தொழிற்சாலையொன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில் 16 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 7 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் 5 பேர் பற்றிய விபரங்கள் தெரியவரவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவ்விபத்துத் தொடர்பான தீவிர விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (04)

## ஜப்பானில் பரவி வரும் தொற்று ஆபத்தானதல்ல சுகாதார இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார்



*ஜப்பானில் அடையாளம் காணப்பட்ட பக்டீரியா தொற்று நோயானது கொவிட் போன்று உலகளாவிய அளவில் பரவும் சூழ்நிலையை ஏற்படுத்தாது என சுகாதார இராஜாங்க அமைச்சர்சீதா அரம்பேபொல தெரிவித்துள்ளார்.*

*இந்நிலையானது வைரஸ் நிலை அல்ல. மாறாக பக்டீரியா நிலை என்பதால், நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் மூலம் அதனை அந்தந்த நாடுகளிலேயே கட்டுப்படுத்த முடியும்எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*எவ்வாறாயினும், விமான நிலையம் உட்பட பல இடங்களில் பின்பற்ற வேண்டிய சுகாதார நிலைமைகள் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ரென-70)*

## சவுதி அரேபியாவில் அதீத வெப்பநிலை இறப்பு எண்ணிக்கை 1300ஐக் கடந்தது!



சவுதி அரேபியாவில் மெக்கா புனித யாத்திரை சென்றபோது கடும் வெப்பம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,300 ஐக்க ஆக உயர்ந்துள்ளது.

அங்கு சில பகுதியில் 50 டிகிரி செல்சியஸை தாண்டியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் எகிப்தியர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டு உலகம் முழுவதிலுமிருந்து சுமார் 16 லட்சம் யாத்ரீகர்கள் ஹஜ்ஜுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# தேர்த் திருவிழாவில் மடிக்கணினி அன்பளிப்பு





சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய தேர் திருவிழாவை ஒட்டி இன்று வீரமாகாளி அம்பாள் அறப்பணி நிதியத்தாரால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் வறுமை கோட்டுக்கு உட்பட்டோருக்கான உலர் உணவு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது கொடையாளி ஒருவர் அறப்பணி நிதியத்தால் மாணவருக்கு வழங்கி வைக்கப்படுவதற் கான மடிக் கணினி ஒன்றை ஆலய பரிபாலனசபைச்செயலாளர் வை.விஜயகுமாரனிடம் கையளிப்பதையும் தேர் வீதியுலாக் காட்சியையும் படங்களில் காணலாம்.

# மகாஜனக் கல்லூரியின் புதிய அதிபர் பதவியேற்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் புதிய அதிபராக கல்லூரியின் பழைய மாணவர் இராஜரட்ணம் புஸ்பரட்ணம் பதவியேற்றுள்ளார்.

மகாஜனக் கல்லூரி நிறுவுநர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் நினைவு தினமான இன்றைய நாளில் அவர் பதவியேற்றுக்கொண்டு, நிறுவுநர் நினைவு தினத்திற்கும் பரிசளிப்பு விழாவிற்கும் தலைமை தாங்கியுள்ளார்.

# அம்பாறை மாவட்டத்தில் ஊடக மன்றம் அமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு





(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து இன ஊடகவியலாளர்களையும் ஒன்றிணைத்து அவர்களிடையே பரஸ்பர ஒற்றுமையினை ஏற்படுத்துவதோடு நிலைபேறான ஊடக மன்றத்தினை அமைக்கும் வேலைத் திட்டமொன்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சுடன் இணைந்து இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் நேற்று(23) முன்னெடுக்கப்பட்டது.

தொழில் மற்றம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் அம்பாறை நகரில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜே.பி.டி.வீரசிங்க உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் மனுஷ நாணயக்கார பல்வேறு பின்னடைவுகளில் காணப்பட்ட இலங்கை நாடு தற்போது முன்னேற்றம் கண்டு வருவதாகவும், மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய கலாசாரமொன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிக்க மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் ஆகியன கடந்த இரு தினங்களாக பல்துறை சார்ந்தவர்களை அம்பாறை நகரப் பகுதியில் ஒன்று சேர்ந்து பல்வேறு மக்கள் நல செயற்பாடுகளை மேற்கொண்டன.

இவ்வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக செல்லும் மக்களின் நலனை மையப்படுத்தி ஊடகவியலாளர்களையும் இச்செயற்றிட்டத்தில் இணைக்கும்வகையில் இந்நிகழ்வு இடம்பெற்றிருந்தமை விசேட அம்சமாகும்.

மாவட்டங்கள் தோறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், ஊடக மன்றங்களை அமைத்து வரும் நிலையில், அம்பாறை அம்மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்களையும் ஒன்றிணைத்து எதிர்காலத்தில் பல்வேறு மக்கள் நல செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் நோக்கிலேயே இந்நிகழ்வு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிகத்தின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் பொதுமக்களுக்கு ஏற்படும் நன்மைகள் மற்றும் அசௌகரியங்கள் போன்றவற்றை ஊடக மயப்படுத்தி அனைவருக்கும் நன்மை ஏறபடுத்தும் வகையில் இவ்வாறு அமைக்கப்படும் ஊடக மன்றங்கள் செயற்படவுள்ளன.

இதன்போது வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக செல்வோர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை தொடர்பிலும், அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை எவ்வாறு வெளிக்கொணர வேண்டுமென்பது தொடர்பிலும் துறைசார் வளவாளர்கள் மூலம் விளக்கமளிக்கப்பட்டன.

அத்தோடு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகத்தின் மூலம் இணைந்து ஊடக செயற்பாட்டினை மேற்கொண்ட தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான கொடுப்பனவுக் காசோலைகள் இதன்போது வழங்கப்பட்டதுடன், நிகழ்வில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களுக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அன்பளிப்புப் பைகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# தேங்காய் எண்ணெய் விலை உயர்விற்கு சுத்திகரிப்பு மற்றும் இறக்குமதியாளர்கள் பொறுப்பேற்க வேண்டும்!

## நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் தெரிவிப்பு



தேங்காய் எண்ணெய் விலை உயர்வுக்கு காரணம் எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் இறக்குமதியாளர்கள்

எண்ணெய் கையிருப்பை பதுக்கி வைத்திருப்பதேயாகும் என நுகர்வோர் உரிமைகளைப்பாதுகாக்கும்தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், " ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய்யின் விலை ரூபாய் 150 முதல் 200 வரை அதிகரித்துள்ளது. நியாய விலையில் தேங்காய் எண்ணையை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த வேளையிலேயே இந்த விலை அதிகரிப்பு இடம்பெற்றது.

தேங்காய் எண்ணெய்யில் பாம் எண்ணெய் கலக்கப்படுவதிலும் இந்த அரசாங்கம் முற்றுப்புள்ளி வைத்திருந்தது. இப்படியான நிலையில் எண்ணெய் விலை அதிகரிப்பிற்கு சுத்திகரிப்பு நிறுவனங்கள் மற்றும் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் ஆகியனவே பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில், நமது நாட்டுக்குத் தேவையான 95 வீத தேங்காய் எண்ணெய்யை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் மற்றும் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யும் நிறுவனங்களே வழங்குகின்றன.

எனவே, நுகர்வோர் அதிகார சபை அவர்களின் களஞ்சியசாலைகளை சோதனையிடல் வேண்டும். தேங்காய் எண்ணெய் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிய வேண்டும். ஆனால், இன்று நுகர்வோர் அதிகார சபையோ இவற்றை கண்டுகொள்ளாமல் உறங்கிக்கொண்டிருக்கின்றது" - என்றார். (ரென-72)

# எதிர்வரும் தேர்தலில் பொன்சேகாவிற்கு வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்காதிருக்க ஐ.ம.சக்தி தீர்மானம்



*எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு வேட்பாளர் நியமனம் வழங்காதிருக்க அக்கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*எதிர்காலத்தில் கட்சியின் செயற்பாடுகள் மற்றும் கட்சியினால் ஏற்பாடு செய்யப்படும் பேரணிகள் மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்பதற்கு வாய்ப்பு வழங்காதிருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*கட்சித் தலைமையையும், கட்சியையும் பொன்சேகா தொடர்ந்து விமர்சித்து வருவதைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.*

*அவர் மேலும் கூறுகையில், சரத் பொன்சேகாவிற்கு கட்சி பொருந்தவில்லையென்றால், அவர் எந்த நேரத்திலும் கட்சியை விட்டு வெளியேறுவதற்கு எந்தவொரு ஆட்சேபனையும் கிடையாது எனவும் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ரென-73)*






## கிளிநொச்சியில் கருச்சிதைவு விசாரணைகள் ஆரம்பமாகின

கிளிநொச்சியில் உள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலையில் கருச்சி தைவுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் இன்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் இவ்வாறு கருச் சிதைவுகள் அடையாளம் காணப்பட்ட நிலை யில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குற்றத்தடுப்புப் பொலிசார் இது குறித்த விசாரணை களை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்று கிளிநொச்சி பதில் நீதவான் விசார ணைகளை மேற்கொண்டிருந்தார்.

தனியார் நிறுவன வளாகத்தில் குறித்த செய்தியை காட்சிப்படுத்த ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (02)

## தேசிய மக்கள் சக்தியின் மக்களை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம்



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

தேசிய மக்கள் சக்தியின் மக்களை விழிப்புணர்வூட்டும் 45 நாட் கள்வேலைத்திட்டத்தின்கீழ்அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிக ளில் மக்கள் சந்திப்புக்களை அக்கட்சி யின் பிரமுகர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய கல்முனைத் தொகுதியின் நற்பிட்டிமுனைபகுதி மற்றும் சம்மாந்துறை தொகுதிகளுக்காக தேசிய மக்கள் சக்தியின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.ஆதம்பாவா தலைமையில் மக்களை விழிப்புணர்வூட்டும்செயற்திட்டங்கள் சனி மற்றும் ஞாயிறு இரு தினங்களில் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு கல்முனைத் தொகுதியின் நற்பிட்டிமுனை மற்றும் சம்மாந்துறை தொகுதிகளுக்காக தேசிய மக்கள் சக்தியின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.ஆதம்பாவா தலைமையில் பிரசாரத்திற்காக வருகை தந்த குழுவினரை அப்பகுதி பொதுமக்கள் இளைஞர்கள்வரவேற்றதுடன்தேசிய மக்கள் சக்தியின் பிரசாரத்திலும் இணைந்து கொண்டனர்.

அத்துடன் தேசிய மக்கள் சக்தியின் துண்டுப்பிரசுரங்கள் யாவும் கல்முனைத் தொகுதியின் நற்பிட்டிமுனை மற்றும்சம்மாந்துறை தொகுதிகளுக்காக பகுதி எங்கும் பொதுமக்களிடம்வழங்கப்பட்டுள்ளன.

இச்செயற்பாடானது எதிர்வரும் தேர்தலை முன்னிறுத்தி மக்கள் மத்தியில் விழிப்பூட்டல் பிரச்சாரம் மேற்கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.


JRIDE
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
DOWNLOAD
DRIVER APP
Ride Driver
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
JRIDE TAXI APP
SPEED IT NET
+94 703 563213
www.jride.lk